# அரசின் செயற்பாடே தமிழ் மக்கள் பொது வேட்பாளரை நிறுத்துவதற்கான சூழ்நிலையை நிர்ப்பந்தித்துள்ளது!

## ஜனாதிபதியின் வடக்கு விஜயத்தைச் சாடி சுரேஷ் கருத்து

“நாட்டு மக்களைப் பிளவுபடுத்தி தமக்கான வாக்கைப் பெற்றுக்கொள்வதை மட்டுமே நோக்கமாகக் கொண்டே ஜனாதிபதியின் அண்மைய வடக்கு மாகாண விஜயம் அமைந்துள்ளது. அதனால் தமிழ் மக்கள் ஒரு பொது வேட்பாளரை நிறுத்துவதற்கான சூழ்நிலையை நிர்ப்பந்தித்துள்ளது” - என்று ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவரும் ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியின் உத்தியோகபூர்வ பேச்சாளருமான சுரேஷ் க. பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியின் வட மாகாண விஜயம் தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் ,

“ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தனது இரண்டாவது ஆண்டின் துவக்கத்தில் வடக்கு மாகாணத்தின் அபிவிருத்தியை நோக்கமாகக் கொண்டு, மாவட்ட அபிவிருத்திக் குழுக்கூட்டங்களை நடாத்துவதற்காகவும் ஏனைய சந்திப்புக்களை நிகழ்த்துவதற்காகவும் வடக்கு மாகாணத்திற்கு விஜயத்தினை மேற்கொண்டிருந்தார்.

அவரது வருகை தொடர்பாக தமிழ் மக்கள் மத்தியில் பல்வேறுபட்ட எதிர்பார்ப்புகள் இருந்தன. மிச்சம் மிகுதியாக உள்ள அரசியல் கைதிகள் விடுவிக்கப்பட வேண்டும். காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான முடிவுகள் எட்டப்பட வேண்டும், காணிகள் முழுமையாக விடுவிக்கப்பட வேண்டும். பதின்மூன்றாவது திருத்தம் முழுமையாக நடைமுறைப்படுத்தப்பட்டு மாகாணசபை தேர்தல்கள் நடைபெற வேண்டும்.

பௌத்த சிங்கள மயமாக்கலை நோக்கமாகக் கொண்டு தமிழர் பிரதேசங்களில் பலாத்காரமாக நிர்மாணிக்கப்படும் பௌத்த கோயில்களின் பணிகள் நிறுத்தப்படவேண்டும். இவை தொடர்பில் ஜனாதிபதி தெளிவான பதிலை அளிப்பார் என்று எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால் இந்த விடயங்கள் தொடர்பாக அவர் தமது விஜயத்தின்போது மேற்குறிக்கப்பட்ட விடயங்கள் தொடர்பாக எந்தவிதமான ஆக்கபூர்வமான கலந்துரையாடல்களையோ தெளிவுபடுத்தல்களையோ மேற்கொள்ளவில்லை.

2 ➤



மாலைக்கதிர்
Maalaikkathir
சாயல் - 01 வள்ளுவர் ஆண்டு 2054 மார்கழி 20 புதன்கிழமை 10.01.2024 கதிர் 155

JITF 2024
14TH JAFFNA INTERNATIONAL TRADE FAIR
14ஆவது யாழ் சர்வதேச வர்த்தகக் கண்காட்சி
முற்றவெளி மைதானத்தில்
JANUARY 19 | 20 | 21

## 3 தேர்தல்களுக்கான காலப்பகுதி அறிவிப்பு

ஜனாதிபதித் தேர்தல், நாடாளுமன்றத் தேர்தல் மற்றும் மாகாண சபைத் தேர்தல் ஆகியவற்றை நடத்துவம் காலப்பகுதி நிர்ணயிக்கப்பட்டுள்ளது எனத் தெரியவருகின்றது.

இதன்படி 2024 செப்டெம்பரில் ஜனாதிபதித் தேர்தலையும், 2025 ஜனவரியில் நாடாளுமன்றத் தேர்தலையும், 2025 மார்ச்சில் மாகாண சபைத் தேர்தலை நடத்தவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் முகாமைத்துவக் குழு, ஜனாதிபதி தலைமையில் நேற்று கூடியது. இதன்போது இது பற்றி தெரியப்படுத்தப்பட்டுள்ளது என அறியமுடிகின்றது.

அத்துடன் அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் தேசிய வேட்பாளராக ரணில் விக்கிரமசிங்கவைக் களமிறக்குவதற்கு ஐக்கிய தேசியக் கட்சியின் முகாமைத்துவக் குழு முடிவெடுத்துள்ளது. (அ)

# உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டு படுகொலையின் நினைவேந்தல்





உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டுப் படுகொலையின் ஐம்பதாவது ஆண்டு நினைவேந்தல் இன்று யாழ்ப்பாணத்தில் உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது.

யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற நான்காவது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டில் படுகொலை செய்யப்பட்டவர்களின் 50 ஆவது ஆண்டு நினைவேந்தல் இன்றாகும்.

யாழ். முற்றவெளியில் அமைந்துள்ள உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டு படுகொலை நினைவாலயத்தில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சொலமன் சிறில் தலைமையில் இன்று காலையில் நினைவேந்தல் நிகழ்வு நடைபெற்றது.

இதன்போது உயிர்நீத்தவர்களுக்கு அகவணக்கம் செலுத்தி பொதுச் சுடர் ஏற்றப்பட்டு மலர்மாலைகள்

2 ➤

## இலங்கை வந்தடைந்த பிரித்தானிய இளவரசி



பிரித்தானிய இரண்டாம் எலிசபெத் மகாராணியின் மகளான பிரித்தானிய இளவரசி அன்னே மற்றும் அவரது கணவர் வைஸ் அட்மிரல் சேர் டிம் லோரன்ஸ் இருவரும் மூன்று நாட்கள்

2 ➤

## பயங்கரவாதி நாவல் அறிமுகவிழா இன்று யாழ் பல்கலைக்கழகத்தில்



ஈழத்து எழுத்தாளரும், யாழ் பல்கலைக்கழக முன்னாள் மாணவர் ஒன்றியச் செயலாளருமான தீபச்செல்வனின் “பயங்கரவாதி“ நாவல் அறிமுகவிழா இன்றைய தினம் யாழ் பல்கலைக்கழகத்தில் இடம்பெற்றது.

யாழ் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்த நிகழ்வுக்கு மாணவர் ஒன்றியத் தலைவர் கே.துவாரகன் தலைமை தாங்கினார்.

பிரதம விருந்தினராக

2 ➤

## ஐ.எம்.எப். பிரதிநிதிகள் குழு இன்று இரவு இலங்கைக்கு

சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள் குழுவொன்று இன்று இரவு இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளது என்று நிதி அமைச்சு தெரிவித்துள்ளது.

குறித்த பிரதிநிதிகள் நாளை (11) முதல் 17 ஆம் திகதி வரை நாட்டில் தங்கியிருப்பார்கள் என்றும் நிதி அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இலங்கைப் பொருளாதாரத்தின் அண்மைக்காலப் போக்குகளை ஆராய்வதற்காக இந்தக் குழு விஜயம் செய்யவுள்ளது.

சர்வதேச நாணய நிதியத்திடம் இருந்து கடன் வசதிகளைப் பெற்றுக் கொண்ட பின்னர், நாட்டின் பொருளாதார சீர்திருத்த நடவடிக்கைகள் தொடர்பான ஆய்வுகளும் குறித்த குழுவால் மேற்கொள்ளப்படும் என்றும் நிதி அமைச்சு தெரிவித்துள்ளது.

இதனைத் தொடர்ந்து ஜனாதிபதி, பிரதமர், நிதி அமைச்சர் மற்றும் மத்திய வங்கி அதிகாரிகளுடன் சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள் கலந்துரையாடல்களை முன்னெடுப்பார்கள் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது. (அ)

## வலி. வடக்கில் 23 ஏக்கரை விடுவிக்கவுள்ள இராணுவம்

யாழ்ப்பாணத்தில் உயர் பாதுகாப்பு வலயத்தினுள் உள்ள 23 ஏக்கர் காணிகளை விடுவிக்கவுள்ளதாக இராணுவத்தினர் யாழ். மாவட்ட செயலகத்திற்கு அறிவித்துள்ளனர்.

வலிகாமம் வடக்கில் வறுத்தலைவிளான் பகுதியில் உள்ள காணிகளையே விடுவிக்கவுளதாக இராணுவத்தினர் அறிவித்துள்ளனர்.

வலிகாமம் வடக்கில் சுமார் 3 ஆயிரம்

2 ➤

## வலி. வடக்கில் .........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஏக்கர் காணி முப்படைகளின் வசம் உள்ள நிலையில், அவற்றை விடுவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என அண்மையில் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் மேற்கொண்ட ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் கோரிக்கை விடுக்கப்பட்ட நிலையில், 23 ஏக்கர் காணிகளை விடுவிக்க இராணுவத்தினர் நடவடிக்கை எடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

## இலங்கை வந்தடைந்த ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு இன்று பிற்பகல் 1.15 மணியளவில் இலங்கைக்கு வருகை தந்துள்ளனர்

இலங்கை மற்றும் ஐக்கிய இராச்சியத்துக்கு இடையிலான இராஜதந்திர உறவுகளின் 75ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு இலங்கை அரசின் அழைப்பின் பேரில் இளவரசி இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவையும் அவர் சந்திக்கவுள்ளார். (அ)

## பயங்கரவாதி நாவல் அறிமுகவிழா ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கலைப்பீடாதி பதி பேராசிரியர் சி.ரகுராமும், சிறப்பு விருந்தினராக அரசறிவியல் துறைத் தலைவர் கே.ரி. கணேசலிங்கமும் கலந்துகொண்டனர்.

நாவல் விமர்சனத்தை சைவ சித் தாந்தத் துறையைச் சேர்ந்த சிரேஷ்ட விரிவுரையாளர் தி.செல்வ மனோகரன் வழங்கினார். (O1)

## உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டு .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அணிவிக்கப்பட்டு மலரஞ்சலி செலுத்தப்பட்டது.

இந்த நினைவேந்தல் நிகழ்வில் மதத் தலைவர்கள், அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள், கட்சி ஆதரவாளர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டிருந்தனர்.

1974 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 3 ஆம் திகதி தொடக்கம் 10 ஆம் திகதி வரை யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்ற நான்காவது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டில் ஏற்பட்ட கலவரத்தில் 9 தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டனர்.

உலகளாவிய ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த இந்த மாநாட்டை யாழ்ப்பாணத்தில் நடத்தவிடாமல் அப் போதைய ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க தலைமையிலான அரசு, பொலிஸாரை அனுப்பிக் கலவரத்தை ஏற்படுத்தியது என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

## அரசின் செயற்பாடே தமிழ் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் தொடர்ச்சியாகப் பேசிவரும் அபிவிருத்தி தொடர்பில் மாத்திரமே பேசினார். இதற்கு முன்னரும் அபிவிருத்தி தொடர்பில் அவர் பல்வேறு கருத்துகளைக் கூறியிருக்கின்றார். ஆனால் அவற்றுக்கான முறையான நிதி ஆதாரங்கள் கிடைக்கவில்லை என்ற குற்றச்சாட்டு இந்த அரசாங்கத்தின் மேல் தொடர்ச்சியாக இருந்து வருகின்றது.

ஜனாதிபதிக்கும் சிங்கள அரசியல் தலைமைகளுக்கும் கடந்தகாலத்தை நினைவுபடுத்த விரும்புகிறோம்.

யுத்தத்திற்கு முன்பாக, முழு இலங்கைக்கும் தேவையான விவசாய உற்பத்திகளையும் கடல் உணவுகளையும் வடக்கு-கிழக்கு மாகாணங்கள் பெருமளவில் வழங்கிவந்தன.

முப்பது வருட யுத்தத்தில் எமது விவசாயம் முற்றாக அழிக்கப்பட்டது. மக்கள் இடம்பெயர்ந்தார்கள். விவசாயக் காணிகள் தரிசு நிலங்களாகவும் காடாகவும் மாறியது. இருந்த ஒருசில தொழிற்சாலைகளும் யுத்தத்தைக் காரணம் காட்டி அழித்தொழிக்கப்பட்டன. முழு இலங்கைக்கும் உணவளித்த மக்கள் தமக்கே வாழ்வாதாரம் இல்லாத ஒரு நிலைக்குத் தள்ளப்பட்டார்கள்.

இவர்களுக்குத் தேவையான அனைத்து உதவிகளையும் செய்து, அந்த மக்கள் பொருளாதாரத்தில் முன்னேறுவதற்கு வழி சமைத்துக் கொடுக்க வேண்டிய அரசாங்கம் அது தொடர்பில் எத்தகைய பிரத்தியேக நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவில்லை.

அதுமட்டுமன்றி, காடாக மாறியுள்ள அவர்களது காணிகளை விடுவிப்பதற்கே அவர்கள் கடந்த பதினான்கு வருடங்களாகப் போராடி வருகின்றனர்.

இந்த இலட்சணத்தில்தான், சிங்கள அரசாங்கத்தின் செயற்பாடு இருக்கின்றதென்பதை ஜனாதிபதி புரிந்துகொள்ள வேண்டும்.

யுத்தத்திற்குப் பின்னர், வடக்கு-கிழக்கு தமிழ் மக்கள் அரசாங்கத்தின் உதவிகள் ஏதுமின்றி, தமது வாழ்வாதாரத்தையும் வாழ்க்கை முறையையும் தாமே கட்டியெழுப்பிக் கொள்வதற்காக வைராக்கியத்துடன் தொடர்ந்தும் போராடி வருகின்றனர்.

யதார்த்தங்கள் இவ்வாறிருக்கையில், ஜனாதிபதி குறிப்பிடுகின்ற வடக்குமாகாண அபிவிருத்தி என்பது எவ்வளவு தூரம் சாத்தியம் என்பதை நாங்கள் பொருத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

அதேசமயம், தமிழ்க் கட்சிகள் முன்வைத்த பதின்மூன்றாவது திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்தி தமிழ் மக்களின் அரசியல், சமூக, பொருளாதார அபிலாசைகளை நிறைவேற்றுவது தொடர்பில் எந்தவிதமான ஆணித்தரமான பதில்களும் அளிக்காமல் பதின்மூன்றாவது திருத்தம் என்பது பொருளாதார அபிவிருத்திக்குப் போதுமானது என்ற கருத்தை மாத்திரம் கூறிச் சென்றிருக்கின்றார்.

பதின்மூன்றாவது திருத்தம் என்பது, இந்திய-இலங்கை ஒப்பந்தத்தின் பிரகாரம், தமிழ் மக்களுடன் அதிகாரங்களைப் பகிர்ந்து கொள்வதற்காக உருவாக்கப் பட்ட மாகாண சபைகளுக்கான அதிகாரங்களை மையமாகக் கொண்டது. கடந்த ஐந்து வருடங்களுக்கு மேலாக மாகாணசபை தேர்தல்களை நடாத்தாமல் இருப்பதுடன், பதின்மூன்றாவது திருத்தத்தினூடாக மாகாணங்களுக்கு வழங்கப்பட்ட பல அதிகாரங்கள் மீளவும் மத்திய அரசால் பறிக்கப்பட்டும் இருக்கின்றது.

இலங்கையின் அரசியல் ஸ்திரத்தன்மைக்கும், பொருளாதார அபிவிருத்திக்கும் தமிழ்த் தேசிய இனப் பிரச்சினைக்கான தீர்வு என்பது முக்கியமானது. இவை இல்லாமல், நாட்டின் பொருளாதார அபிவிருத்தி என்பது ஒருபொழுதும் சீராக நடைபெறாது. வெளிநாட்டு முதலீடுகளையும் அரசாங்கம் எதிர்பார்க்க முடியாது.

இதனைப் புரிந்துகொண்டு மாகாணசபைத் தேர்தல்களை நடாத்தி, அதற்குரித்தான முழுமையான அதிகாரங்களை வழங்கி, சர்வதேச முதலீடுகளைக் கொண்டுவருவதற்கான அதிகாரங்களை மாகாண அரசுகளுக்கு வழங்குவதன் மூலமே இலங்கையின் பொருளாதாரமும் அரசியல் ஸ்திரத்தன்மையும் வலுவடையும்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அவர்கள் கொழும்பிலும் சரி, யாழ்ப்பாணத்திலும் சரி புலம்பெயர் தமிழ் மக்களின் முதலீடுகள் அவசியம் என்பதை மீண்டும் மீண்டும் கூறிவருகின்றார்.

கடந்த காலங்களில் தென் பகுதியிலிருந்த தமிழ் மக்களின் பொருளாதாரம் என்பது அடிக்கடி அரசாங்கம் உருவாக்கிய இனக் கலவரங்களினால் நிர்மூலம் செய்யப்பட்டது.

இதன் காரணமாக, பல இலட்சம் கோடி மதிப்புள்ள சொத்துகளை தமிழ் மக்கள் இழந்து அகதிகளாகக் கப்பலேற்றி அனுப்பப்பட்ட வரலாறுகள் தமிழ் மக்களுக்குண்டு. இவ்வாறான ஒரு சூழ்நிலையில், புலம்பெயர் தமிழ் மக்களின் முதலீடுகளுக்கு எவ்விதப் பாதுகாப்பும் இல்லாமல், அவற்றை எதிர்பார்ப்பதென்பது தமிழ் மக்களை மேலும் மேலும் முட்டாள்கள் என்று நினைப்பதற்கு ஒப்பாகும்.

மாகாணங்களுக்கென ஒதுக்கப்பட்ட பொலிஸ் அதிகாரங்கள், காணி அதிகாரங்கள் போன்றவற்றை வழங்கி, அவற்றை நடைமுறைப்படுத்துவதற்கான அதிகாரங்களையும் மாகாணங்களுக்கு வழங்கி, சர்வதேச முதலீடுகளைக் கொண்டுவருவதற்கான அதிகாரங்களை மாகாணங்களுக்கு வழங்குவதனூடாகத்தான் புலம்பெயர் தமிழர்களின் முதலீடுகளுக்கு பாதுகாப்புக் கிட்டும் என்பதை ஜனாதிபதியும் அவருடைய தலைமையிலான அரசும் புரிந்துகொள்ள வேண்டும்.

இதை வழங்குவதனூடாக ஜனாதிபதி குறிப்பிடும் வடக்கை பொருளாதார மையமாக மாற்றலாம் என்பது மட்டுமன்றி, தென் ஆசியாவின் நிதி ஆதார மையமாகவும் மாற்றமுடியும்.

இவை ஒருபுறமிருக்க, யுத்தம் முடிவுற்று பதினான்கு வருடங்கள் கடந்த நிலையில், தமிழ் மக்கள் தமது காணிகளை முழுமையாக விடுவிக்கக் கோரிவருகின்ற போதிலும், இன்னமும் அது முழுமையடையவில்லை. இப்பொழுதும்கூட இடம்பெயர்ந்த மக்கள் யாழ்ப்பாணத்தில் முகாம்களிலும் உறவினர் வீடுகளிலும் வாடகை வீடுகளிலும் வாழ்ந்து வருகின்றனர்.

இவர்களது நிலங்கள் காணிகளை முப்படையினரும் பலாத்காரமாக தம்வசம் வைத்திருக்கின்றனர். அவை விடுவிக்கப்பட வேண்டுமாயின், ஜனாதிபதிதான் அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமே தவிர, மாவட்ட செயலாளர்களோ ஏனைய அதிகாரிகளோ எடுக்க முடியாது.

2025ஆம் ஆண்டுக்குள் மீள்குடியேற்றம் முழுமைபெற வேண்டும் என்று கூறும் ஜனாதிபதி, காணிகளை விடுவிப்பதற்கான ஆக்கபூர்வமான அறிவுறுத்தல்களோ நடவடிக்கைகளோ எடுக்கவில்லை என்பதுதான் யதார்த்தமானது.

இத்தகைய சூழ்நிலையில், அவர் குறிப்பிட்ட காலத்திற்குள் மீள்குடியேற்றங்கள் பூரணப்படுத்தப்படுமா? என்ற கேள்வி எழுகின்றது.

அதனைப் போலவே காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பாக யுத்தம் முடிந்த காலத்திலிருந்து இன்று-வரை அந்த மக்கள் போராடி வருகின்றபோதிலும்கூட அவர்களை சந்தித்துப் பேசுவதற்கோ அல்லது அவர்களுக்கு நம்பிக்கை அளிக்கும் விதத்திலோ எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை என்பதுடன், ஜனாதிபதியை சந்திக்க முயற்சித்த தாய்மார்களைக் கைது செய்து சிறையில் அடைத்தது என்பது மிக மோசமான செயற்பாடாகும்.

காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களின் நீண்ட போராட்டத்திற்கு மதிப்பளிக்காதது மட்டுமல்ல அவர்களது உறவினர்களின் இருப்பு தொடர்பில் அவர்கள் அறிந்துகொள்வதற்கான நீதியும் தொடர்ந்து மறுக்கப்பட்டு வருகின்றது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அவர்களின் இத்தகைய வார்த்தை ஜாலங்கள் தமிழ் மக்களை ஏமாற்றுவதற்கான ஒரு முயற்சியாகத் தென்படுகிறதே தவிர, ஜனாதிபதியின்மீதோ அவரது தலைமையின் மீதான அரசின் மீதோ நம்பிக்கை கொள்வதற்கு இடமளிக்கவில்லை.

அரசாங்கத்தின் இவ்வாறான தொடர் நடவடிக்கைகள்தான் தமிழ் மக்கள் ஒரு பொது வேட்பாளரை நிறுத்துவதற்கான சூழ்நிலையை நிர்ப்பந்தித்துள்ளது."
- என்றார். (அ)





செய்திகளையும் இன்னும் பல காணொளிகளையும் பார்வையிட
காலைக்கதிர் TV
காலைக்கதிர் TV YouTube தளம்

உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட
maalaikkathir@gmail.com



# மிதி வெடி

கிளிநொச்சி .... எண்டு சொன்னா கெத்தாக இருந்தது ஒரு காலம் பாருங்கோ.....

இப்பவும் அங்க சில பேர் கெத்துக் காட்டுறம் பேர்வழி எண்டு எல்லாத்தையும் போட்டுடைச்சுப் போட்டு நிக்கினம். அந்தக் காலத்தில அடக்கி வாசிச்சவை எல்லாம் இப்ப அலப்பறை பண்ணினம். அதுவும் கொஞ்ச நஞ்ச அளப்பறையே...? பார்க்கக் - கேக்க கொதி தான் வருகுது.

பொதுவாக நாட்டில சரி, வீட்டில சரி ஆட்சி மாற்றம் எண்டு ஒண்டு நடந்தால், அதோட சேர்ந்து ஆள் மாற்றமும் நடக்கிறது தானே?

நாட்டில தலை மாறினால், அமைச்சரவை மாறும், ஆளுநர் மார் மாறுவினம்... அப்பிடித்தானே?

இப்ப கொஞ்ச நாளைக்கு முன்னம் வடக்கின் வைத்தியத் துறையில வந்த மாற்றம், கிளிநொச்சியிலையும் கடுமையான மாற்றத்தை ஏற்படுத்தியிருக்குதாம்...

அவர் ஒரு டாக்குத்தர்... மனுசனுக்கு ஒரு காலத்தில நல்ல பேர் இருந்தது...... தன்னந்தனியா நிண்டு மக்களுக்காக உயிரை வெறுத்து வேலை செய்த மனுசன். ஆள், தேளைப் பார்க்காமல் அப்பிடி வேலை செய்தவர். பொறுப்பெடுத்த கொஞ்ச நாளிலையே பெரிய பெரிய டாக்குத்தர் மாருக்கெல்லாம் பெருங் கலக்கம்.....

நிண்டவன், போனவன் வந்தவனோட எல்லாம் வாய் வைச்ச “நேர்ஸ்” மாரில இருந்து, “அட்டென்டன்” வரையும் இப்ப பொது மக்களோட பௌவியமா நடக்கினம் எண்டா அதுக்குக் காரணம் இந்த மனுசன் தான்.

நேரங் காலமில்லாமல் வெளியில கிளினிக் நடத்தினவையும், வேலை நேரத்தில வெளியில போய் வந்தவையும் இவர் பணிக்கத் தொடங்கின பிறகு கடும் திருத்தம் கிட்டத்தட்ட 10 வருசத்துக்குள்ள தன்ர பொறுப்பில இருக்கிற ஆசுப்பத்திரியை அப்பிடி மாத்தினதால எங்கட சனம் கையெடுத்துக் கும்பிடாத குறை... அந்த மனுசன்ர நல்லாட்சி இன்னும் அங்க நல்லாத்தான் போதுது... இப்பவும் ஒரு குறையில்ல....

ஆனாப் பாருங்கோ... அந்த மனுசன்ர போதாக் காலமோ என்னவோ... ஒண்டுக்கு இரண்டு பொறுப்பைக் குடுத்து... போதாக் குறைக்கு ஆள், படை, அம்பு, சேனையெண்டு அல்லக்கையளையும் கூட விட, இப்ப அந்தாளிண்ட பேர் .. காத்தில பறக்குது....

என்ன தான் இருந்தாலும் சொந்த மண்ணை விட்டுக் குடுக்கேலாது தானே? கிளிநொச்சி தன்ர பிறந்த மண் எண்டதாலயோ என்னவோ கிளிநொச்சியல இருக்கிற பிராந்திய அலுவலகமொண்டில அதிகமாக அக்கறை எடுத்ததால எல்லாம் தலைகீழாப் போய்க் கிடக்குது.

எல்லாத்தையும் “ரிமோட்” ல இயக்க வேணும் எண்டு தலையில இருந்து சாரதி வரைக்கும் “அக்ரிங் அப்பொயின்ற்மென்ற்”. ஒரு பதவியிலயும் நிரந்தரமான எவரும் இல்லை. ஆர்.டி.எச்.எஸ் பதில், ரீ. ஓ பதில், ட்ரைவர் பதில்.... இப்பிடி எல்லாமே அக்ரிங்ல ஓடுதாம். பதிலாளைப் போட்டாத்தானே “பினாமி” வேலை செய்யலாம் எண்டு அங்க கதைக்கினம்.

16 வருசம் வேலை செய்த ட்ரைவர் ஒராளை மாடு முட்டினதெண்டு குற்றஞ்சாட்டி வாகனம் குடுக்காமல் வைச்சிருக்கினமாம். அந்த ட்ரைவர் தேசியத்துக்கு எண்டு போய், அ’புரத்தில மாட்டி நல்ல துன்பப்பட்டு மீண்ட ஒராள். இவ்வளவு காலமா ஆர்.டி.எச்.எஸ் ன்ர லாண்ட்குறூஸர்ல வேலை செய்யேக்க ஒரு முறைப்பாடு வரேல்ல.

அல்லக்கை ஒண்ட அக்ரிங்கா போட்டதும் மாடு முட்டியிருக்குது. அது தொடர்பான உள்ளக விசாரணையில ட்ரைவரில பிழை இல்லை எண்டு அறிக்கை வந்த பின்னும் எங்கட ஆள் விடவில்லை. வெளி நிபுணர்களை வச்சும் ஒரு விசாரணைக் குழு போட்டாராம்.... அந்தக் குழுவும் ட்ரைவரில பிழை இல்லை எண்டு அறிக்கை எண்டு தான் அறிக்கை குடுத்ததாம். ஆனால் இன்னும் மீட்சியில்லை.

ஏன் தெரியுமே? ஆலயத்துக்கு ஒருக்காப் போய் அண்ணனைப் பாரன் எண்டு கூட நிக்கிறவை சொல்லியிருக்கினமாம்....

என்னணண்ணை நீ, பட்டும் படாமல் நொட்டிப் போட்டுப் போறாய்? கொஞ்சமாவது விளக்கமாச் சொல்லன் எண்டு நீங்கள் கேக்கிறியள்.

கொஞ்சம் பொறுங்கோ....

இது மிதிவெடி தானே? கண்ணிவெடியில்லையே? இப்பக் காலோட தான் போகும். முட்டுப்பட்டு, முரண்டு பிடிச்சா மிச்சத்தையும் பாப்பம்.

சத்தியமாச் சொல்லுறன் என்ற கவலை என்னவெண்டா, யாழ்ப்பாணத்தில பெரிய “மெடிக்கல் மாஃபியா” க்களையெல்லாம் கட்டி ஆண்ட மனுசன், கிளிநொச்சியில போய் கெட்ட பேர் வாங்குது.... எல்லாம் மாகாண சபைக் கதிரைக்குத் தான் எண்டும் கதைக்கிறாங்கள்.

என்னவோ, மூர்த்தியில கீர்த்தி குறையாமல் காத்துக் கொள்ளுங்கோ...!

-நரமுனி

# Nippon Paint Lanka நிறுவனத்துக்கு Pinnacle Sri Lanka 2023 இன் விருது









**Pinnacle Sri Lanka 2023** விருது வழங்கல் விழாவில், வர்ணப் பூச்சுக்களின் பிரிவில் ஆண்டின் சிறந்த நிறுவனப் பெயராக **Nippon Paint** விருதினைத் தனதாக்கிக் கொண்டுள்ளது.

இந்த விருதும் பாராட்டும், சிறப்பான தயாரிப்பைத் தருவதற்கான தங்களது அர்ப்பணிப்புக்கு ஒரு சான்றாகும் என்று **Nippon Paint Lanka** நிறுவனம் தெரிவிக்கிறது.

இந்த அங்கீகாரத்திற்காக நாங்கள் உண்மையிலேயே நன்றியுள்ளவர்களாக இருக்கிறோம் எனவும், மேலும் புதுமை மற்றும் தரத்துடன் உலகை வண்ணமயமாக்க நாங்கள் தொடர்ந்து பணியாற்றுவதற்கு இந்த விருது சிறந்த ஊக்குவிப்பாகும் எனவும் **Nippon Paint Lanka** நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

# தொலைக்காட்சி நேரலை நிகழ்ச்சின்போது துப்பாக்கியுடன் புகுந்த கும்பல் தாக்குதல்!

## ஈக்வடோரில் அதிர்ச்சிச் சம்பவம்

ஈக்வடோரில் தொலைக்காட்சி நேரலையின் போது துப்பாக்கியுடன் புகுந்த கும்பல் தாக்குதல் நடத்திய சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

ஈக்வடோர் நாட்டில் போதைப் பொருள்கள் கடத்தலை தடுக்க பல்வேறு நடவடிக்கைகளை அந்நாட்டு அரசு மேற்கொண்டு வருகின்றது. இந்த நிலையில், சிறையில் இருந்த போதைப் பொருள் கடத்தல் கும்பலின் தலைவர்கள் இருவர் சில நாள்களுக்கு முன் தப்பித்தனர்.

நாடு முழுவதும் பதற்றமான சூழல் ஏற்பட்டதை தொடர்ந்து, அமைதியை நிலைநாட்ட 60 நாள்கள் அவசர நிலையை பிரகடனம் செய்வதாக திங்கட்கிழமை ஈக்வடோர் நாட்டின் அதிபர் டானியல் நோபாவா அறிவித்தார்.

இதனைத் தொடர்ந்து, நாடு முழுவதும் ஆயுதம் ஏந்திய கும்பல் கலவரத்தில் ஈடுபடத் தொடங்கியது. இந்தக் கலவரத்தில் இரண்டு நாள்களில் மட்டும் 10 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில், குவாயாகில் நகரில் உள்ள பிரபல தொலைக்காட்சி நிலையத்துக்குள் புகுந்த 13 பேர் கொண்ட துப்பாக்கி ஏந்திய கும்பல், நேரலையின் போதே தொலைக்காட்சி ஊழியர்களை தாக்கியுள்ளனர்.

நேரலை ஒளிபரப்பாகிக் கொண்டிருக்கும் போதே



ஊழியர்களை துப்பாக்கி முனையில் மிரட்டும் காட்சிகள் நாட்டு மக்களிடையே அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளன.

இதையடுத்து சம்பவ இடத்துக்கு விரைந்த காவல் துறையினர் 13 பேரை கைது செய்து தொலைக்காட்சி ஊழியர்களைப் பத்திரமாக மீட்டனர். இந்தத் தாக்குதலில், ஓர் ஒளிப்பதிவாளர் உள்பட இருவருக்குக் காயம் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவத்தைத் தொடர்ந்து, நாடு முழுவதும் உள்ள நிறுவனங்கள், வணிக வளாகங்கள் அடைக்கப்பட்டு அசாதாரண சூழல் நிலவுகிறது.

கலவரத்தில் ஈடுபடுபவர்களை உடனடியாக கைது செய்ய ராணுவத்தினருக்கு ஈக்வடோர் அதிபர் உத்தரவிட்டுள்ளார். (04)

# நிலநடுக்கத்தில் உயிரிழந்தோர் எண்ணிக்கை 200 ஐத் தாண்டியது



ஜப்பானில் ஏற்பட்ட சக்திவாய்ந்த நிலநடுக்கத்தில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 200ஐத் தாண்டியுள்ளது.

இஷிகாவா தீவுக்கு அருகே ஜப்பான் கடல் பகுதியில் புத்தாண்டு அன்று ஏற்பட்ட நிலநடுக்கம் ரிச்டர் அளவுகோலில் 7.6 அலகுகளாகப் பதிவானது. அதன் பிறகும், தொடர்ச்சியாக 20 க்கும் மேற்பட்ட முறை சிறிய நிலநடுக்கங்கள் ஏற்பட்டன.

இந்த நிலையில், இன்றைய நிலைவரப்படி நிலநடுக்கத்தால் சேதமடைந்த கட்டடங்களின் இடிபாடுகளில் சிக்கி உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 203 ஆக உயர்ந்துள்ளது.

இது தவிர, 611 பேர் காயமடைந்துள்ளதாகவும், சுமார் 210 பேர் மாயமாகியுள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன. 30 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். மீட்புப்பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. (04)

# பிரான்ஸ் நாட்டின் இளம் பிரதமராக அமைச்சர் கப்ரியல் அட்டல் நியமனம்

பிரான்ஸின் கல்வித் துறை அமைச்சராக இருந்து வந்த கப்ரியல் அட்டலை அந்த நாட்டின் பிரதமராக அதிபர் இமானுவல் மக்ரோன் நேற்று நியமித்துள்ளார்.

34 வயதாகும் அட்டல், பிரான்ஸின் மிக இளைய வயது பிரதமர் என்பது குறிப்பிடத்தக்கது.

பிரான்ஸில் தீவிர வலதுசாரி இயக்கங்களுக்கு ஆதரவு அதிகரித்து வரும் நிலையில், அதற்கேற்ப தனது அரசின் கொள்கைகளை மக்ரோன் மாற்றி வருவதாகக் கூறப்படுகிறது. அதன் ஒரு பகுதியாக தனது அமைச்சரவையில் மிகப் பெரிய மாற்றத்தை மேற்கொண்ட அவர், கல்வித் துறையில் வலதுசாரிக் கொள்கைகளைப் புகுத்தி வந்ததாகக் கூறப்படும் கப்ரியல் அட்டலை புதிய பிரதமராக நியமித்துள்ளார்.

ஏற்கெனவே அரசின் செய்தித் தொடர்பாளராகவும் பொறுப்பு வகித்துள்ள கப்ரியல் அட்டல், தன்னை நேர்பாலின சேர்க்கையாளர் என்று வெளிப்படையாக அறிவித்துக் கொண்டுள்ள பிரான்ஸின் முதல் பிரதமரும் ஆவார்.

பிரான்ஸ் அதிபராக கடந்த 2017 ஆம் ஆண்டு பொறுப்பேற்றபோது இமானுவல் மக்ரோனும் அந்த நாட்டின் மிக இளைய அதிபர் என்ற பெருமையைப் பெற்றார் என்பது நினைவுகூரத்தக்கது.

தற்போது 46 வயதாகும் அவர், தாராளமாயக் கொள்கைகளை வலியுறுத்தும் நடுநிலைக் கட்சியான ரினையசன்ஸ் கட்சியின் சார்பில் போட்டியிட்டு அதிபராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். ஆனால், அண்மைக் காலமாக, தீவிர வலதுசாரி எதிர்க்கட்சியான தேசி யப் பேரணி கட்சியின் அகதிகள் குடியேற்ற எதிர்ப்பு, இஸ்லாம் எதிர்ப்புக் கொள்கைகளுக்கு மக்களிடையே ஆதரவு பெருகி வருகிறது.

2022 ஆம் ஆண்டில் நடைபெற்ற அதிபர் தேர்தலில் இமானுவல் மக்ரோன் வெற்றி பெற்றாலும், அந்த ஆண்டே நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் அவரது நடுநிலைக் கட்சி பெரும்பான்மை இழந்து, நாட்டின் முதல் சிறுபான்மை அரசை அமைத்தது. இதையடுத்து, இமானுவல் மக்ரோனும் தனது ஆட்சியின் போக்கை தற்போதைய அரசியல் சூழலுக்கு ஏற்ப மாற்றியமைத்து வருகிறார்.

அதன்படி, பிரான்ஸில் குடியேறும் வெளிநாட்டினரை நாடுகடத்தும் அரசின் அதிகாரத்தை அதிகரிப்பதற்கான சட்டத்தை நாடாளுமன்றம் அண்மையில் நிறைவேற்றியது.

இந்தச் சட்டம் பிரான்ஸின் அரசியல் சாசனத்துக்கு எதிரானது என்று அப்போதைய பிரதமர் எலிசபெத் போர்னே விமர்சித்தார். இந்தச் சூழலில், எஞ்சியுள்ள ஆட்சிக் காலத்தில் மேலும் பல வலதுசாரிக் கொள்கைகளை அமல்படுத்துவதற்கு வசதியாக தனது அமைச்சரவையில் மிகப் பெரிய மாற்றத்தை இமானுவல் மக்ரோன் மேற்கொண்டார். அதன் ஒரு பகுதியாக, மக்ரோனின் வேண்டுகோளை ஏற்று பிரமர் பதவியிலிருந்து நடுநிலைவாதி எலிசபெத் போர்னே திங்கட்கிழமை விலகினார். அவருக்குப் பதிலாக தற்போது கப்ரியல் அட்டல் நியமிக்கப்பட்டுள்ளார்.

முதலில் மத்திய-இடதுசாரிக் கட்சியான சோஷலிஸ்ட் கட்சியிலும், அதன் பிறகு நடுநிலை மற்றும் தாராளக் கொள்கைகளைக் கொண்டிருந்த ஆளும் ரினையசன்ஸ் கட்சியிலும் அங்கம் வகித்தாலும், கல்வி அமைச்சராகப்



பொறுப்பேற்ற பிறகு கப்ரியல் அட்டல் தீவிர வலதுசாரிக் கொள்கைகளை அமுல்படுத்தியதாகக் கூறப்படுகிறது.

வகுப்புகளில் முஸ்லிம் மாணவிகள் பர்தா அணிந்து வருவதைத் தடுக்கும் வகையில், நீள அங்கிகளுக்கு அவர் தடை விதித்தது பரபரப்பை ஏற்படுத்தியது. பாடசாலைகளில் 'மதச்சார்பற்ற தன்மை'யை உறுதிப்படுத்துவதற்காக இந்த உத்தரவைப் பிறப்பித்ததாக கப்ரியல் அட்டல் கூறினார்.

இந்தச் சூழலில், அவரை புதிய பிரதமராக நியமித்திருப்பது வாக்காளர்களின் மனோநிலையை அறிந்து கொண்டு அடுத்த தேர்தலில் கட்சியை வெற்றி பெறச் செய்வதற்கான இமானுவல் மக்ரோனின் உத்தியாகக் கருதப்படுகிறது. ஏற்கெனவே ஆளும் கட்சியின் இளம் செய்தித் தொடர்பாளராக இருந்ததால் கப்ரியல் அட்டல் மக்களிடையே நன்கு அறிமுகமானவராக உள்ளார்.

மக்ரோனின் அமைச்சரவையிலேயே அவருக்குத்தான் மக்கள் செல்வாக்கு மிகவும் அதிகமிருப்பதாக கருத்துக்கணிப்புகள் கூறுகின்றன. எனவே, 2027 ஆம் ஆண்டில் நடைபெறவிருக்கும் அடுத்த அதிபர் தேர்தலில் ரினையன்ஸ் கட்சி சார்பில் அவர் போட்டியிடுவதற்கான வாய்ப்புகள் உள்ளதாகவும் கருதப்படுகிறது. (04)



# ஈரான் முஸ்தபா பல்கலைக்கழக கிளை புத்தளத்தில் அமைக்க கலந்துரையாடல்



(கற்பிட்டி எம்.எச்.எம் சியாஜ்)

புத்தளம் மாவட்ட மாணவர்களுக்கான ஈரான் புலமைப் பரிசில் மற்றும் முஸ்தபா பல்கலைக்கழக கிளையினை அமைப்பது தொடர்பான கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது.

மேஜர் ஜெனரல் காசிம் சுலைமான் நினைவு தினத்தை முன்னிட்டு கொழும்பிலுள்ள ஈரான் கலாசார நிலையத்தில் இடம்பெற்ற விசேட நிகழ்வின்போதே மேற்படி விடயம் பற்றி கலந்துரையாடப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கலந்துரையடலில் ஈரானிய உயர்ஸ்தானிகர் கலாநிதி அலிறீஸா டெல்க்ஹோஸ் இன் விசேட அழைப்பின் பேரில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் டொக்டர் இல்யாஸ், முன்னாள் புத்தளம் நகர சபை உறுப்பினர் ரனீஸ் பதூர்தீன் மற்றும் சமூக ஆர்வலர் இப்லால் அமீன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# அம்பாறை சேனநாயக்கா சமுத்திரத்தின் வான்கதவுகள் மீண்டும் திறக்கப்பட்டன



(வி.ரி.சகாதேவராஜா)

அம்பாறை இங்கினியாகல சேனநாயக்கா சமுத்திரத்தின் வான்கதவுகள் இன்று (10) புதன்கிழமை காலை மீண்டும் திறக்கப்பட்டன. இதனால் கரையோரப் பகுதிகளில் வெள்ளம் பரவியுள்ளது.

110 அடி உயரம் உள்ள இந்த அணைக்கட்டில் 108.4 அடி உயரத்துக்கு நீர் நிரம்பி உள்ளது.

7 லட்சத்து 70 ஆயிரம் ஏக்கர் அடி நீரைக் கொள்ளக் கூடிய சேனநாயக்கா சமுத்திரத்தில் தற்பொழுது 7 லட்சத்து 38 ஆயிரம் ஏக்கர் அடி நீர் நிரம்பியுள்ளது. இதனால், இன்றும் 5 வான் கதவுகளினூடாக ஐந்தரை அடி நீர் திறந்து விடப்பட்டது.

மொனராகலை, பதுளை, அம்பாறை மாவட்டங்களில் பெய்து வரும் அடைமழை காரணமாக

அதன் நீர்மட்டம் வெகுவாக உயர்ந்துள்ளதால் அந்நீர்த்தேக்கத்தின் வான் கதவுகளை திறந்து மேலதிக நீரை வெளியேற்றுவதற்கான நடவடிக்கைகளை எடுக்கப்பட்டதாக மாவட்ட நீர்ப்பாசன பொறியியலாளரும், மாவட்ட அரசாங்க அதிபரும் தகவல்களை வெளியிட்டுள்ளனர்.

இதனால் வெளியேறும் நீர் கல்லோயா வலது கரை பாதாகொடை ஊடாக தமணை, மலையடிக்குளம், எட்டாம் கட்டை சந்தி மற்றும் அக்கரைப்பற்று, ஆலையடிவேம்பு, திருக்கோவில் பிரதேச செயலகப் பிரிவுகளிலுள்ள கால்வாய்கள், வயல்கள் ஊடாக சம்புக்களப்பு, பட்டியடிப்பிட்டி ஆறுகளை நிறைத்து அக்கரைப்பற்று முகத்துவாரங்களினூடாக கடலை நோக்கி செல்கின்றது.

மறு புறமாக, கல்லோயா இடது கரை இது சம்மாந்துறை, அட்டாளைச்சேனை, நிந்தவூர், காரைதீவு, சாய்ந்தமருது, கல்முனை பிரதேச செயலகப்பிரிவிலுள்ள ஆறுகள் குளங்களை நிரப்பி களியோடை ஆறு, மற்றும் மாவடிப்பள்ளி ஆறு, போன்ற பகுதிகளூடாக சென்று கடலை சென்றடைகிறது.

இதனால், பொது மக்கள் மிகுந்த அவதானத்துடன் இருக்குமாறும், இப்பகுதிகளிலுள்ள கால்நடைகளை வேறு இடங்களுக்கு மாற்றுமாறும், இப்பிரதேசங்களிலுள்ள ஆறுகள், குளங்களில் நீராடுவதை தவிர்க்குமாறும், பொது மக்கள் எச்சரிக்கப்படுவதுடன் இந்த வெள்ள நீரினால் அடித்துச் செல்லப்படும் முதலைகள் மக்கள் வசிப்பிடங்களுக்கு வரும் அபாயமுள்ளதால் அவைகளிலுமிருந்து மிகுந்த கவனத்துடன் இருக்குமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.






# மூத்த சமூகவியலாளர் பேராசிரியர் சீ.வை.தங்கராசா தென்கிழக்கு பல்கலைக்கழகத்திற்கு விஜயம்

(அஸ்ஹர் இப்றாஹிம்)

மூத்த சமூகவியலாளர் பேராசிரியர் சீ.வை.தங்கராசா அண்மையில் (8) தென்கிழக்கு பல்கலைக்கழகத்திற்கு விஜயமொன்றை மேற்கொண்டிருந்தார்.

இந்த விஜயத்தின்போது தென்கிழக்கு பல்கலைக் கழகத்திலுள்ள பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள் கலந்து கொண்ட விசேட கலந்துரையாடல் ஒன்று ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது

தென்கிழக்குப் பல்கலைக்கழக உப வேந்தர் பேராசிரியர் றமீஸ் அபூபக்கர் அவர்களின் ஆலோசனையின் பேரில் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த மேற்படி கலந்துரையாடலில் தேசிய மற்றும் சர்வதேச ரீதியிலான தனது நுண்ணறிவினையும் அனுபவத்தையும் பேராசிரியர் சீ.வை.தங்கராசா பகிர்ந்து கொண்டார்.

# அம்பாறை மாவட்ட செயலகத்தின் இலக்கிய விருது வழங்கும் விழா



(நூருல் ஹுதா உமர்)

கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணை மற்றும் வழிகாட்டலில் அம்பாறை மாவட்ட செயலகம் தமிழ் மொழிமூல 13 பிரதேச செயலகங்களுடன் இணைந்து ஏற்பாடு செய்த அம்பாறை மாவட்ட இலக்கிய விருது மற்றும் சான்றிதழ், பரிசில்கள் வழங்கும் விழா மாவட்ட கலாசார உத்தியோகத்தர் ரீ.எம். ரிம்ஸானின் நெறிப்படுத்தலில் அட்டாளைச்சேனை பிரதேச செயலாளர் எம்.ஏ.சி.ஏ. சாபீர் தலைமையில் அட்டாளைச்சேனை தனியார் மண்டபத்தில் நேற்று நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் சிந்தக்க அபேவிக்ரம கலந்து சிறப்பித்ததோடு, கௌரவ அதிதியாக அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வீ. ஜெகதீசன் கலந்து கொண்டார்.

விசேட அதிதிகளாக மட்டக்களப்பு மாவட்ட மாவட்ட நீதவான் கௌரவ எம்.எச்.எம். ஹம்ஸா, சம்மாந்துறை நீதவான் நீதிமன்ற நீதிபதி கௌரவ டி.கருணாகரன், காரைதீவு பிரதேச செயலாளர் எஸ். ஜெகராஜன், சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ்.எல்.எம். ஹனிபா, நாவிதன்வெளி பிரதேச செயலாளர் ஆர். ராகுலநாயகி, அக்கரைப்பற்று பிரதேச செயலாளர் ரீ.எம். அன்ஸார், இறக்காமம் உதவி பிரதேச செயலாளர் எம்.ஏ.சி.ஏ. நஸீல், சாய்ந்தமருது உதவி பிரதேச செயலாளர் எம்.ஐ. முஆபிக்கா, அம்பாறை மாவட்ட உதவி செயலாளர் டபிள்யு.வி. செனவிரத்ன, கிழக்கின் கேடயம் பிரதானி எஸ்.எம். சபீஸ், பிரதேச செயலகங்களின் கலாச்சார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், கல்விமான்கள், சிரேஷ்ட கலைஞர்கள், அரச அதிகாரிகள், மாணவர்கள், பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

தமிழ், முஸ்லிம் மக்களின் கலாசாரங்களைப் பிரதிபலிக்கும் கலை, இலக்கிய நிகழ்வுகள் எல்லோரையும் கவரும் வகையில் இங்கு அரங்கேற்றப்பட்டதோடு, அம்பாறை மாவட்டத்தில் கலாசார நிகழ்வுகளில் வெற்றி பெற்ற மாணவர்கள், கலைஞர்களுக்கு சான்றிதழ்கள், பரிசில்கள் வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டனர். இந்நிகழ்வில் சுவதம் விருதுகளும் வழங்கிவைக்கப்பட்டன.

# கட்டணம் செலுத்தாத ஏழைகளுக்கு மின்சாரம் துண்டிப்பு ஆபத்தான சமூக மட்டத்தை உருவாக்குமென எச்சரிக்கை!

## துறைசார் கண்காணிப்புக் குழுவால் முக்கிய பரிந்துரைகள்

மின்கட்டணம் செலுத்த முடியாமல் கடந்த 3 காலாண்டுகளில் 8 இலட்சம் பேரின் மின்சாரம் துண்டிக்கப்பட்டுள்ளதாக பொருளாதார நெருக்கடியைத் தணிக்கும் துறைசார் கண்காணிப்புக் குழுவில் தகவல் வெளியாகியுள்ளது.

அண்மையில் நடைபெற்ற குழுக் கூட்டத்தில் இந்தத் தகவல்கள் கவனத்தில் கொள்ளப்பட்டதாகக் குறிப்பிடப் படுகிறது. இந்த மின்வெட்டுகளில் பெரும்பாலானவை மிகவும் ஏழை மக்களின் இணைப்புகள் என்பது தெரிய வந்துள்ளது.

மின்வெட்டு காரணமாக குழந்தைகளின் ஊட்டச் சத்து முதல் மாணவர்களின் கற்றல் நடவடிக்கை உள்ளிட்ட பலவற்றை அவர்கள் இழந்துள்ளதாகவும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. இந்நிலைமை காரணமாக எதிர் காலத்தில் அவர்களுக்கு ஆபத்தான சமூக மட்டத்தை உருவாக்குவதற்கான அடிப்படையை ஏற்படுத்திவிடுவதாக இது அமையலாம் என அந்தக் குழு குறிப்பிட்டுள்ளது.

பொருளாதார நெருக்கடியின் தாக்கத்தைப் போக்குவதற்கும், நிலையான பொருளாதார வளர்ச்சிக்கான வசதிகளை வழங்குவதற்கும் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு மற்றும் மின்சார சபை ஆகியவற்றின் பொறுப்பைக் கருத்தில் கொண்டு, சர்வதேச நாணய நிதியம் அவதானித்துள்ள நிர்ணயச் செலவுக்கு ஏற்றதாக மின் கட்டணத்தை மாற்ற வேண்டும் என்று குழு பரிந்துரைத்துள்ளது. இதன்படி, 5 முன்மொழிவுகளை உடனடியாக அமுல்படுத்துமாறு துறைசார் கண்காணிப்புக் குழு, பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவிற்கு பரிந்துரைத் துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த ஆண்டு ஜனவரி மாதம் முதலாக 3 மாத காலத்திற்கு ஒரு தடவை மின் கட்டணத்தை தீர்மானிக்கும் வகையில், கட்டண முறையைக் கொண்டுவர மின்சார சபைக்கு உத்தரவிடுவதும் அதில் உள்ளடங்கியுள்ளது.

தீவிர வறுமையால் பாதிக்கப்பட்ட குடும்ப அலகுகளுக்கு சிறப்பு நியாய விலை முறையை அறிமுகப்படுத்துவது மற்றும் தேசிய பொருளாதாரத்தை வலுப்படுத்தும் வகையில் தொழில் துறையைப் பாதுகாக்கும் விலைக் கொள்கையை விரைவாக அறிமுகப்படுத்துவது ஆகியவை இரண்டாவது மற்றும் மூன்றாவது முக்கிய முன்மொழிவுகள் ஆகும். இந்த ஆண்டின் மீதிக் காலப் பகுதியில் விலை நிர்ணயம் பற்றிய முழு வெளிப்படைத் தன்மை வாய்ந்த மதிப்பாய்வைத் தொடங்குவது மற்றொரு பரிந்துரை ஆகும். (04)

# மட்டக்களப்பு புகையிரத நிலையம் வெள்ளத்தில்



(அஸ்ஹர் ஆதம்)

சீரற்ற காலநிலையினால் தொடர்ந்து பெய்து வரும் மழை காரணமாக, மட்டக்களப்பு மாவட்டத்தின் பல பிரதேச செயலாளர் பிரிவுகளின் தாழ் நில பிரதேசங்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

அத்தோடு மழை தொடர்ச்சியாக பெய்து வருவதனால் மட்டக்களப்பு ரயில் நிலையமும் வெள்ளத்தில் சிக்கியுள்ளது.

தற்போதைய நிலையில் ரயில் பயணங்கள் இடம்பெற்றாலும், குறித்த பகுதியில் வெள்ள நீர் அதிகரிக்குமாயின் ரயில் போக்குவரத்தினை மேற்கொள்வதில் சிரமம் ஏற்படலாம் என அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.






# தென் கிழக்கு பல்கலைக்கழகம் 16ஆம் தேதி வரை மூடப்பட்டது!



(வி.ரி. சகாதேவராஜா)

இன்று கொட்டித்தீர்த்த கனமழை மற்றும் வெள்ளத்தால் இலங்கை தென்கிழக்குப்பல்கலைக்கழக சுற்று வட்டாரத்தில் வெள்ளநீர் நிரம்பியிருக் கிறது.

வெள்ளம் காரணமாக இன்று புதன் கிழமை (10) முதல் தென்கிழக்குப் பல்கலைக்கழக ஒலுவில் வளாகத் தின் சகல பீடங்களின் கல்வி நடவடிக் கைகளும் எதிர்வரும் 16 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை வரை நடைபெறா தென, தென்கிழக்குப் பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் ரமீஸ் அபூபக் கர் தெரிவித்துள்ளார்.

பல்கலைக்கழக நிர்வாக நடவடிக் கைகளும் தென்கிழக்குப் பல்கலைக் கழக பிரயோக விஞ்ஞான பீட சம்மாந் துறை வளாக கல்வி நடவடிக்கைக ளும் தொடர்ந்தும் நடைபெறுமென வும் அவர் அறிவித்துள்ளார்.

இஸ்லாமிய கற்கைகள் மற்றும் அரபு மொழி பீடம், கலை கலாசார பீடம், தொழிநுட்பப் பீடம், பொறியியல் பீடம், வர்த்தக முகாமைத்துவ பீடம் ஆகியவை மூடப்பட்டுள்ளன.

அம்பாறை சேனாநாயக்க சமுத்திர நீர்ப்பாசனக் குளத்தின் வான் கதவுகள் திறக்கப்பட்டுள்ளதால் தென்கிழக்குப் பல்கலைக்கழக ஒலுவில் வளாக சூழ லில் வெள்ள நிலை ஏற்பட்டுள்ளமை தெரிந்ததே.

# மட்டக்களப்பு - பொலன்னறுவ நெடுஞ்சாலையில் ஆபத்து!

## அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் அறிவிப்பு



(அஸ்ஹர் இப்றாஹிம் )

மகாவலி கங்கையின் நீர் மட்டம் திடீரென அதிகரித்தூள்ளதால் மட்டக் களப்பு - பொலநறுவ நெடுஞ்சாலை யின் கல்லெல்ல பகுதியால் பயணிப் பது மறு அறிவித்தல் வரும் வரை நிறுத் தப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள் ளது.

தொடர்ச்சியான மழை பெய்து கொண்டிருப்பதால் வீதியால் பரவும் வெள்ள நீரின் அளவும் நிமிடத்திற்கு நிமிடம் அதிகரிப்பதால் ஆபத்தான நிலைமை ஏற்படலாம் என்ற அச்சத் தில் அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் இவ் வீதியை பயன்படுத்து வதை தவிர்த்துக் கொள்ளுமாறு பொது மக்களைக் கேட்டுள்ளதுடன், அவசரமாக பயணிப்போர் மாற்று வழிகளைப் பயன்படுத்துமாறும் அறி வுறுத்தியுள்ளது.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 10.01.2024 இல் வெளியிடப்பெற்றது.